# ரணிலின் இந்திய விஜயத்துக்கு முன் மாகாண சபைக்கான தேர்தல் தொடர்பாக வாக்குறுதியை எதிர்பார்க்கும் டில்லி!



அடுத்த மாதம் இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும், என்ற வாக்குறுதியை அவரது விஜயத்துக்கு முன்னதாகவே இந்தியா எதிர்பார்க்கின்றது என்று அறியமுடிகின்றது.

அவரது விஜயத்துக்கு முன் மாகாண சபைத் தேர்தல் உட்பட பல நிபந்தனைகளுக்கு ரணில் உடன்பட வேண்டி வரும் என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தகவல், இந்தியத் தரப்பால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்சவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே, பஸில் ராஜபக்ச 'மொட்டு'வின் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களை பத்தரமுல்லைக் காரியாலயத்துக்கு அழைத்து இது தொடர்பில் பேசியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ரணிலுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவுள்ளது. அது தொடர்பான நிபந்தனைக்கு அவர் இந்தியா செல்லும் முன்பே உடன்பட வேண்டி வரும். இந்தியா இதையே எதிர்பார்க்கின்றது என்று பஸில் கூறியுள்ளார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை, என்று கூறி வரும் ரணில் அரசு இதே காரணத்தை இந்தியாவிடம் கூறி மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 12 திங்கட்கிழமை 26.06.2023 கதிர் 11



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்


## வடக்குக்கிழக்கில் காணி அபகரிப்பு மூலம் மௌன யுத்தம் நடைபெறுகின்றது; கருணாகரம் எம்.பி. பகிரங்கச் சாடல்!



தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு, விகாரைகள் அமைக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதன் மூலம் வடக்குக் கிழக்கில் மௌன யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது, என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

2009 வரை தமிழ் மக்களை வஞ்சித்துக் கொண்டிருந்த இலங்கை அரசு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பு வடகிழக்கில் வித்தியாசமான ஒரு திணிப்பை முன்னெடுத்து வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா உள்ளிட்ட தியாகிகளின் 33 ஆவது நினைவு அஞ்சலி மட்டக்களப்பில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழர்களுடைய விடுதலைத் தாகம் இன்னும் தணியவில்லை என்பதை தென்னிலங்கை புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்களுடைய தாகமும் விடுதலை நோக்கமும் இன்னும் தனியவில்லை என்பது இலங்கை வெளிநாட்டு அமைச்சருக்குத் தெரியவேண்டும்.

கோட்டாபயவின் விசுவாசியான வெளிநாட்டு அமைச்சர் ஒரே இரவில் தீர்வைக் கொடுக்கமுடியாது, கிடைப்பதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். எனவே, இனப்பிரச்சினை தோன்றி எத்தனை ஆண்டுகள் என அவருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஒரே இரவில் இந்தப் பிரச்சனைக்கான தீர்வை நாங்கள் கேட்கவில்லை.

தற்போது வடகிழக்கில் நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம். தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பு, தமிழர் பிரதேசங்கள் எங்கும் விகாரைகள், உயர்ந்த மலைகளில் விகாரை அமைப்பது என்று சுற்றுலாப் பயணிகள்கூட இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதைப் பறைசாற்றுவதற்காக இந்தத் திட்டங்களைச் செய்துவருகின்றனர், என அவர் தெரிவித்துள்ளார்.

## ஜூலை வரை பொறுமை காக்கின்றோம்! ரணிலின் வாக்குறுதி - சுமந்திரன் கருத்து



தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்வரும் ஜூலை மாதம் வரை பொறுமையாக இருக்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி வழங்கியுள்ளார், இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக ஜனாதிபதியிடம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. அது தொடர்பாக ஆராய்ந்து ஜூலை மாதத்தின் பின் உரிய நடவடிக்கை எடுப்பதற்கே ஜனாதிபதி இவ்வாறு கால அவகாசம் விதித்துள்ளார். அதுவரை நாம் பொறுமையுடன் காத்திருக்கின்றோம்.

எமது பிரச்சினைக்கான தீர்வைத் தேடி நாம் இந்தியா செல்ல வேண்டிய தேவை இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நாம் நம்புகின்றோம், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாளை கட்சித் தலைவர்கள் கூட்டம்

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் கூடவுள்ளது.

சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றம் இவ்வாரம் சனி, ஞாயிறு தினங்களில் அவசரமாகக் கூட்டப்படவுள்ள நிலையிலேயே நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றி ஆராய இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மின் கட்டணத் திருத்தம் 30 இல் இறுதித் தீர்மானம்



மின் கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் 30 ஆம் திகதி பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவால் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டணத் திருத்தப் பட்டியல் இலங்கை மின்சார சபையினால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அண்மையில் வழங்கப்பட்டது.

2➤

## கொழும்பில் விபத்து; தமிழ் வர்த்தகர் மரணம்! மனைவி காயங்களுடன் வைத்தியசாலையில்

கொழும்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் தமிழ் வர்த்தகர் ஒருவர் சாவடைந்துள்ளார். அவரின் மனைவி படுகாயமடைந்துள்ளனர். கொழும்பு, இரத்மலானைப் பிரதேசத்தில் இன்று காலை 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தனது வர்த்தக நிலையத்துக்கு மனைவியை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு குறித்த வர்த்தகர் பயணித்துள்ளார். இதன்போது எதிரே வந்த ஹயஸ் வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் வர்த்தகர் சம்பவ இடத்திலேயே இறந்துள்ளார். அவரின் மனைவி படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்தவரும் இரத்மலானையில் வசிப்பவருமான பாரதிராஜா முகுந்தன் (வயது 44) என்ற வர்த்தகரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹயஸ் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## லிட்ரோ எரிவாயு விலை குறைக்கப்படுகிறது!



லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்த விலைக் குறைப்பு நடவடிக்கையை ஜூலை மாதம் முதல் நடைமுறைப்படுத்தத்

2➤

# இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## யாழ் பல்கலைக்கழகத்தில் மூவருக்கு பேராசிரியர்களாகப் பதவி உயர்வு!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பொறியியல், விவசாயம் மற்றும் இந்து கற்கைகள் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று, ஞாயிற்றுக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி, பொறியியல் பீடத்தின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எம்.கே.அகிலன் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறையில் பேராசிரியராகவும் , விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க.பகீரதன் விவசாய உயிரியல் துறையில் பேராசிரியராகவும், இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன், இந்து நாகரிகத் துறையிப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

## மாமனிதர் அமரர் நடராஜா ரவிராஜின் 61வது ஜனன தினம் நேற்று அனுஷ்டிப்பு




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அமரர் நடராஜா ரவிராஜின் 61 ஆவது ஜனன தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் அமைந்துள்ள அன்னாரது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து சுடரேற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் அன்னாரின் துணைவியார் சசிகலா ரவிராஜ், சமூக செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டிருந்தனர்.

## டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு ஊழியர்கள் நிரந்தர நியமனம் கோரி போராட்டம்



டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவில் பணிபுரியும் ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி கொழும்பில் இன்றைய தினம் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த 2016 ஆம் ஆண்டு டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவில் பணிபுரிவதற்காக இணைத்துக் கொள்ளப்பட்ட தமக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை, என போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, எமக்கு நிரந்த நியமனம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தே இந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம். இதற்கு முன்னரும் பல தடவைகள் போராட்டங்களை முன்னெடுத்திருந்த போதும், அது தொடர்பில் இதுவரை முடிவு எதுவும் கிடைக்கவில்லை.

ஆகவே, எமது நியமனம் தொடர்பில் சாதகமான முடிவை அரசாங்கம் தரவேண்டும் என எதிர்பார்க்கிறோம், என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த டெங்கு ஒழிப்பு ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

## அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட நடுவர்கள் அமைப்பின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்




(நூருல் /ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட நடுவர்கள் அமைப்பின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நேற்று கல்முனை சாஹிரா தேசியக் கல்லூரி மண்டபத்தில், அமைப்பின் பதில் தலைவர் எம்.ஏ.பர்ஸான் தலைமையில் இடம்பெற்றன.

இதன்போது, பிராந்திய உதைபந்தாட்ட மேம்பாடு, அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட நடுவர்கள் அமைப்பின் எதிர்காலச் செயற்பாடுகள், நடுவர்கள் கௌரவிப்பு உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத்தினரும் தெரிவுசெய்யப்பட்டனர். போசகர்களாக சிரேஸ்ட நடுவர்களான எம்.ஏ.நபார், எம்.ஐ.எம். அமீரலி ஆகியோரும், ஆலோசகர்களாக ஏ. எம்.எம். இப்ராஹிம், ஏ.எம். இப்ராஹிம், ஏ.எல்.ஏ.கனி, யூ.எல். எம்.ஹனீபா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக எம்.எல்.எம். ஜமால்தீன், தவிசாளராக எம்.எல்.ஏ. தாஹீர், செயலாளராக அலியார் பைஸர், பொருளாளராக, எஸ்.எல்.வை. அரபாத், உப தலைவர்களாக எம்.ஏ. பர்ஸான், ஏ.எம்.நிஷாத், எஸ். எம். உபைத்தீன், உப செயலாளராக ஏ.எம். ஜப்ரான், உப பொருளாளராக ஜே.ஏ. மஜித், கணக்குப் பரிசோதகர்களாக எம்.எம்.றஜீப், ஐ. அஸ்பாக் ஆகியோரும் சபையால் தெரிவு செய்யப்பட்டனர்.

## வேலை செய்துகொண்டிருந்த மூதாட்டி வழுக்கி விழுந்து பலி

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியோரத்தில் பங்களாவத்த பகுதியில் உள்ள விவசாய நிலத்தில் வேலை செய்த மூதாட்டி ஒருவர் தோட்டத்திலிருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நானுஓயா, எடின்புரோ பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய வேலுசாமி காளியம்மா என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மூதாட்டி நேற்று விவசாய தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது மழையுடனான காலநிலை காரணமாகத் தோட்டத்தில் ஓரத்தில் இருந்து வழுக்கி நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் விழுந்து தலையில் பலமாக அடிப்பட்டதன் காரணமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்த விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## லிட்ரோ எரிவாயு விலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக ஜ/ன் மாதம் 4 ஆம் திகதி சமை யல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டிருந்தது. இதற்கமைய 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 452 ரூபாவால் குறைக்கப்பட்டு 3186 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. 5 கிலோகிராம் நிறைகொண்ட லிட்ரோ சமையல் எரிவாயு 181 ரூபாவால் குறைக்கப்பட்டு 1281 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் 2.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 83 ரூபாவால் குறைக்கப்பட்டு 598 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

## மின் கட்டணத் திருத்தம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் மின் கட்டணம் குறைக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு அறிவித்திருந்தது.

எனினும் இம்முறை 3 சதவீதத்தால் மட்டுமே மின்சாரக் கட்டணம் குறைக்கப்படவுள்ளதாகவும், அதுவும் 0-90 அலகுகள் வரையில் மின்சாரப் பாவனையாளர்களுக்கு மட்டுமே மின்கட்டணம் குறைக்கப்படும், என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட -
maalaikkathir@gmail.com

# ஜனாதிபதி ரணிலுக்கு சினைப்பர் தாக்குதல் அபாயம் தேசபந்து தென்னக்கோனின் எச்சரிக்கையால் பரபரப்பு

வெளிநாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு திரும்பும்போது சினைப்பர் தாக்குதல் மேற்கொள்ளப்படலாம், என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அச்சம் வெளியிட்டிருந்தார்.

அதன் காரணமாக ஜனாதிபதி நாடு திரும்பும்போது அவருக்கு உயர் அடுக்குப் பாதுகாப்பு வழங்கவும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடு திரும்பும் போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதி நாடு திரும்பும்போது உயர் அடுக்கு வாகனப் பேரணிக்கு, எதிரான அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்கள் சில வகையான நாச வேலைகளில் ஈடுபடுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்திருந்தார்.

எனவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடு திரும்பும்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு மேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அவர் உத்தரவிட்டிருந்தார்.

ஆயுதக் குழுக்களின் தாக்குதல், சினைப்பர் தாக்குதல், பொது மக்களால் குழப்ப நிலைகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் சாத்தியம் உள்ளிட்ட 6 விடயங்கள் தொடர்பான அபாயம் உள்ளதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய, ஜனாதிபதி மற்றும் பிரமுகர்களுக்கு விமான நிலையத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எவ்வாறு பாதுகாப்பை வழங்குவது என்பது தொடர்பில் 8 அம்சங்களின் கீழ் நீண்ட விளக்கத்துடன் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யானை தாக்கி இளைஞர் சாவு

காட்டு யானை தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மதவாச்சியில் இன்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

27 வயதுடைய குறித்த இளைஞர் வயலுக்குச் சென்றபோதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். சடலத்தை மீட்ட பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ரணிலின் பாதுகாப்புத் தொடர்பாக தகவல் வெளியிட்டவர்களை கைது செய்ய உத்தரவு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு உயர் பாதுகாப்பு வழங்குவது தொடர்பான உள்ளகத் தகவல்கள் எவ்வாறு கசிந்தன என்பது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

படுகொலை முயற்சி இடம்பெறலாம் என்ற சந்தேகத்தின் பேரில் ஜனாதிபதிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என கடந்த சில நாட்களாக சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் பொலிஸ் உள்ளகத் தகவல்கள் எவ்வாறு வெளியே கசிந்தன?, என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சி.ஐ.டியினருக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டு, நாட்டுக்குத் திரும்பும் போது உரிய பொலிஸ் அதிகாரிகளுக்கு இவ்வாறான அறிவுறுத்தல் வழங்கப்படுவது வழைமையாகும். எனினும், பொலிஸாருக்கு வழங்கப்படும் அவ்வாறான அறிவுறுத்தல்களை ஊடகங்களுக்கோ அல்லது தனிநபர்களுக்கோ அனுமதியின்றி வழங்கக் கூடாது எனவும், இதன் காரணமாக சமூக ஊடகங்களில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தகவல்களைக் கசிய விட்டவர்கள், பரப்பியவர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு அவர்களைக் கைது செய்யுமாறும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## ஜனாதிபதி நாடு திரும்பினார்!



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிரித்தானியா, பிரான்ஸ் நாடுகளுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் இன்று காலை 9.10 மணியளவில் எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமான சேவைக்கு சொந்தமான ஈகே-650 ரக விமானத்தின் ஊடாக துபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

## தொல்லியல் விவகாரத்தில் வீணாகத் தலையிடுகின்றனர்! பௌத்த தேரர்களை கடுமையாகச் சாடிய அமைச்சர் விதுர



பௌத்த தேரர்களே வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்களுக்குக் காணி அபகரிப்பு என்பதான வீண் அச்சத்தை ஏற்படுத்துகின்றனர், என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அத்தோடு, தொல்லியல் விவகாரத்தில் பௌத்த தேரர்களும், அரசியல்வாதிகளும் தலையிடுவதை நிறுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு கிழக்கு தமிழர் காணிகள் தொல்லியல் என்ற பெயரால் அபகரிப்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொல்பொருளியல் விவகாரத்தில் பௌத்த தேரர்கள் தலையிடுவதை நிறுத்த வேண்டும் என பல சந்தர்ப்பங்களில் பௌத்த தேரர்களிடம் நேரடியாகத் தெரிவித்துள்ள போதிலும், அவர்கள் அதனை ஏற்கவில்லை.

தொல்பொருள் திணைக்களம் ஆய்வுகளை முன்னெடுக்கும் பகுதிகளுக்குச் சென்று சில பௌத்த தேரர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் காரணமாக வீண் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே இந்த விடயத்தில் அவர்கள் தலையிடுவதை நிறுத்த வேண்டும்.

தொல்பொருளியல் என்பது அரச சட்டத்துக்குட்பட்ட விடயமாகும். தொல்பொருள் கட்டளை சட்டம் இன்றும் நடைமுறையிலுள் ளது. அதனை அனைவரும் பின்பற்ற வேண்டும். சட்டத்துக்கமைய தொல்பொருள் திணைக்களத்துக்கு மாத்திரம் அதன் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க வேண்டும்.

இந்து ஆலயங்களை அழிப்பதற்கோ, தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்கோ எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் மாத்திரமே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் இலாபத்தை ஈட்ட முயற்சிக்காமல், மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வினை வழங்க வட, கிழக்கு அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

## 2022(2023) உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கு செயன்முறைப் பரீட்சைகள் ஆரம்பம்

2022 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான செயன்முறைப் பரீட்சைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அழகியல், தகவல் தொழில் நுட்பம் மற்றும் பொறியியல் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் இன்று முதல் ஜூலை 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கான அனுமதி அட்டைகள் குறித்த அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அவற்றைத் தபால் மூலம் அவர்களது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பியுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மாணவர்கள் https://onlineexams.gov.lk/ என்ற இணையத்தளத்திற்குச் சென்று அனுமதி அட்டைகளைப் பதிவிறக்கம் செய்ய முடியும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை தொடர்பான தெளிவுபடுத்தல்கள் அல்லது தகவல்களுக்கு மாணவர்கள் 1911 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது 0112 784 208, 0112 784 537, 0112 786 616 அல்லது 0112 785 922 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாகவோ அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள முடியும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## 60 வகையான மருந்துகளுக்கு இன்று முதல் விலை குறைப்பு

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 60 வகையான மருந்துகளின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது எனவும், இன்று முதல் மருந்துகளின் விலைகள் 16 வீதத்தால் குறைக்கப்படுகின்றன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டொலரின் பெறுமதி வீழ்ச்சி காரணமாகவே இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 500 மில்லிகிராம் எடையுள்ள பரசிட்டமோல் மாத்திரை ஒன்றின் விலை 3 ரூபா 49 சதமாகக் கணக்கிடப்பட்டுள்ள அதேவேளை, இன்சுலின் 10 மில்லிகிராம் குப்பியின் அதிகபட்ச சில்லறை விலை 2,270 ரூபா 2 சதமாகும்.

375 மில்லி கிராம் அமோக்ஸிசிலின் கிளாவுலானிக் அமிலத்தின் அதிகபட்ச சில்லறை விலை 70 ரூபா 32 சதமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கூகுள் 82 ஆயிரம் கோடி; அமேசன் 1.23 லட்சம் கோடி முதலீடு இந்தியப் பிரதமர் மோடியுடனான சந்திப்புக்குப் பிறகு அறிவிப்பு



அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அமேசன் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி அன்டி ஜாஸ்ஸி, கூகுள் சி.இ.ஓ. சுந்தர் பிச்சை உள்ளிட்டோர் சந்தித்துப் பேசினர்.

இந்த நிலையில், அடுத்த 7 ஆண்டுகளில் அமேசன் நிறுவனம் இந்தியாவில் 1.23 லட்சம் கோடியை முதலீடு செய்யும் என்று அன்டி ஜாஸ்ஸி அறிவித்தார். அத்தோடு, 2025 ஆம் ஆண்டுக்குள் இந் தியாவில் ஒரு கோடி சிறுவணிகங்களை டிஜிட்டல் மயமாக்கவும், 20 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ஏற்கெனவே அமேசான் நிறுவனம் இந்தியாவில் 90,200 கோடியை முதலீடு செய்துள்ளது.

இது போல இந்தியாவில் 82,000 கோடியை முதலீடு செய்ய உள்ளதாகவும், கூகுள் நிறுவனத்தின் பின்டெக் செயல்பாடுகளுக்கான மையத்தை குஜராத்தில் திறக்க உள்ளதாகவும் சுந்தர் பிச்சை அறிவித்தார். இது குறித்து சுந்தர் பிச்சை கூறுகையில், இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்ததைப் பெருமையாக கருதுகிறேன். கூகுள் நிறுவனம் இந்தியாவில் மேற்கொண்டுவரும் 10 பில்லியன் டொலர் முதலீடு குறித்து மோடியிடம் தெரிவித்தேன். இந்தியாவை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பாக அவர் கொண்டிருக்கும் லட்சியம் மற்ற நாடுகளுக்கு முன்னுதாரணமாக உள்ளது, என்று தெரிவித்திருக்கிறார்.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் சி.இ.ஓ. சத்ய நாதெல்லாவுக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையிலான சந்திப்பில், செயற்கை நுண்ணறிவுத் தொழிநுட்பத்தின் தாக்கம் குறித்து பேசியுள்ளனர்.

இவை தவிர, செமி கண்டெக்டர் தயாரிப்பு நிறுவனமான மைக்ரோன் டெக்னோலஜிஸ், இந்தியாவில் 6,750 கோடியை முதலீடு செய்வதாக அறிவித்துள்ளது. மின் வாகனத் தயாரிப்பு நிறுவனமான டெஸ்லாவும் இந்தியாவில் குறிப்பிடத்தக்க அளவில் முதலீட்டை மேற்கொள்ளும் என்று அதன் சி.இ.ஓ. எலான் மஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

அப்பிள், ஓப்பின் ஏ.ஐ., பிளக்ஸ், எஃப்.எம்.சி. கோர்ப்பரேசன் உள்ளிட்ட நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளையும் இந்தியப் பிரதமர் மோடி அமெரிக்கப் பயணத்தில் சந்தித்து உரையாடியமை குறிப்பிடத்தக்கது.

# முதல்வர் ஸ்டாலின் நேரில் விவாதிக்கத் தயாரா? அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி சவால்



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சேலம் மாவட்டம் நங்கவள்ளி தெற்கு ஒன்றியத்தில், தோரமங்கலம் பகுதியில் கட்சித் தொண்டர்களைச் சந்தித்து உரையாற்றினார்.

அப்போது அவர், அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கி வைக்கப்பட்ட 100 ஏரிகள் நிரப்பும் திட்டத்தின் மூலம் ஐம்பதாயிரம் ஏக்கர் பாசன வசதியைப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், இந்தத் திட்டத்தை முடக்கி வைத்தது தி.மு.க. அரசு. அ.தி.மு.க. ஆட்சியில் ஆண்டுக்கு ஒரு லட்சம் பெண்கள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் பயன் பெற்றனர். 5 லட்சம் முதியோருக்கு உதவித்தொகையையும் அறிவித்தோம் அவற்றையும் தி.மு.க. அரசு நிறுத்திவிட்டது, என்று குற்றஞ்சாட்டினார்.

தி.மு.க.வின் ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் தமிழகம் வளர்ச்சி அடைந்துள்ளது, என்று முதலமைச்சர் கூறுகிறார். ஊழலில்தான் வளர்ச்சி அடைந்துள்ளது. முன்னாள் நிதியமைச்சர் கூறிய முப்பதாயிரம் கோடி ஊழல் குறித்துப் பேசினால் வழக்குத் தொடுப்பேன், என்கிறார் ஸ்டாலின். எந்த வழக்கு வேண்டுமானாலும் போடட்டும். அ.தி.மு.க. ஆட்சியின்போது எங்களால் வழக்குப் போட்டிருக்க முடியாதா?

நாங்கள் மக்களுக்கு நன்மை செய்வதற்குத்தான் வந்தோம். அதனால்தான், நான்கரை ஆண்டுகள் சிறப்பான ஆட்சி தந்தோம். இரண்டு ஆண்டுகளாக இந்த ஆட்சி எப்போது போகும்? என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இரண்டு ஆண்டுகளில் மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது? அவரது குடும்பம் வளர்ந்ததுதான் மிச்சம். வாய்ப்புக் கொடுத்த மக்களை ஏமாற்றக் கூடாது. அ.தி.மு.க. ஆட்சியின் மீது ஊழல் குற்றச்சாட்டுக் கூறும் முதலமைச்சர் ஸ்டாலின், அது குறித்து என்னோடு நேரில் விவாதிக்கத் தயாரா?, என்றும் அவர் கேள்விகளை எழுப்பினார்.

உச்ச நீதிமன்ற உத்தரவுப்படிதான் செந்தில் பாலாஜியின் வீட்டில் சோதனை நடத்தப்பட்டது. மடியில் கனமில்லை என்றால் வழியில் ஏன் பயம்?. தமிழகத்தில் 3,500 பார்கள் டெண்டர் விடப்படவில்லை. அதன் மூலம் கிடைக்கும் ஊழல் பணம் மேலிடத்திற்குச் செல்கிறது. ஒரு நாளைக்கு ஒரு கோடி மதுப் போத்தல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு போத்தலுக்கு 10 ரூபாய் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. செந்தில் பாலாஜி வாக்குமூலம் கொடுத்துவிட்டால் ஸ்டாலின் கோட்டையில் இருக்க முடியாது.

ஸ்டாலின் பேசும்போது தொட்டுப்பார், சீண்டிப்பார் என்று பேசுகிறார். எங்களை அடித்தால், நாங்கள் திருப்பி அடித்தால் நீங்கள் தாங்க மாட்டீர்கள் என்று பேசுகிறார். இப்படிப்பட்ட முதலமைச்சர் ஆட்சி செய்வது தமிழகத்திற்குத் தலைகுனிவு. ஸ்டாலினின் மிரட்டலுக்கு யாரும் பயப்படமாட்டார்கள். முதலமைச்சரின் பேச்சு மக்களை அச்சுறுத்தும் விதமாக இருப்பதற்குக் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

83 ஆண்டுகளாக மேட்டூர் அணை தூர்வாரப்படவில்லை, எனது ஆட்சியில்தான் ஒரு ரூபாய் கூட அரசுக்குச் செலவில்லாமல் வண்டல் மண் அள்ளிக் கொள்வதற்கு அனுமதி வழங்கினேன். ஒட்டுமொத்தத் தமிழகத்திற்கும் விடிவு கிடைக்க வேண்டும் என்றால், மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைய வேண்டும், என்றும் எடப்பாடி பழனிசாமி தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.




# முதலில் நீங்கள் மணிப்பூரைக் கவனியுங்கள் ராஜ்நாத் சிங்கிற்கு ஆம் ஆத்மி எம்.பி. பதிலடி

சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதே ஓர் அரசாங்கத்தின் முதல் கடமை என்றும், பஞ்சாப் மாநில அரசு சட்ட ஒழுங்கைக் காக்க தவறிவிட்டதாகவும் இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் விமர்சித்திருந்தார்.

அவரது விமர்சனத்திற்கு ஆம் ஆத்மி கட்சியின் எம்.பி.யான ராகவ் சத்தா பதிலடி கொடுத்துள்ளார். இது குறித்து பேசிய ராகவ் சத்தா, பஞ்சாப் குறித்து ராஜ்நாத் சிங்கிற்குத் தவறான தகவல் கிடைத்துள்ளது என நினைக்கிறேன். பஞ்சாபில் முதலமைச்சர் பக்வந்த் மான் தலைமையில் நடைபெறும் ஆம் ஆத்மி அரசாங்கத்தின் கீழ் மாநில சட்ட ஒழுங்கு நிலைமை மேம்பட்டுள்ளது.

இதே வேளை, மணிப்பூர் எரிந்து கொண்டிருப்பதையும் லட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து நிற்பதையும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதையும் பாதுகாப்பு அமைச்சர் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே மற்ற மாநிலங்களைச் சுட்டிக்காட்டும் முன்பாக மணிப்பூர் வன்முறைக்கு முதலில் பொறுப்பேற்குமாறு வலியுறுத்துகிறேன்.

டெல்லியில் சட்டம் ஒழுங்கு மற்றும் காவல்துறை ஆகியவை மத்திய அரசின் அதிகார வரம்பிற்குள் வருகின்றன. அங்கு தினமும் கொலை, கற்பழிப்பு, கொள்ளைச் சம்பவங்கள் நடக்கின்றன. டெல்லியில் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பா.ஜ.க.வின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட டெல்லி மற்றும் மணிப்பூர் ஆகிய இரு மாநிலங்களிலும் சட்டம் ஒழுங்கு மோசமான நிலையில் உள்ளது. அதனை முதலில் கவனத்தில் எடுக்கவேண்டும், என்று ஆம் ஆத்மி கட்சியின் எம்.பி.யான ராகவ் சத்தா தெரிவித்திருக்கிறார்.

# நீதிமன்றத்தில் போராட்டம் தொடரும் இந்திய மல்யுத்த வீரங்கனை தெரிவிப்பு

இந்திய மல்யுத்த சம்மேளனத் தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது 7 மல்யுத்த வீராங்கனைகள் அளித்த பாலியல் புகார் குறித்து விசாரித்து அவரைக் கைதுசெய்யக்கோரி ஒரு மாதத்துக்கு மேலாக டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட பஜ்ரங் பூனியா, வினேஷ் போகத் உள்ளிட்ட முன்னணி வீர, வீராங்கனைகள் தற்காலிகமாகத் தங்களது போராட்டத்தை ஒத்திவைத்துள்ளனர்.

இந்த நிலையில், மல்யுத்த வீராங்கனைகள் அளித்த பாலியல் புகார் தொடர்பான வழக்கு டெல்லி நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் நிலையில் சாக்ஷி மாலிக் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இந்த வழக்கில், எங்களுக்கு நீதி கிடைக்கும் வரை மல் யுத்த வீரர்களின் போராட்டம் தொடரும், ஆனால் அது நீதிமன்றத்தில் இருக்கும், சாலையில் அல்ல.

அத்தோடு, இந்திய மல்யுத்தக் கூட்டமைப்புக்கான சீர்திருத்தம் குறித்து, வாக்குறுதி அளித்தபடி தேர்தல் பணிகள் தொடங்கியுள்ளன. ஜூலை 11 இல், தேர்தல் தொடர்பாக அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நாங்கள் காத்திருப்போம் என்று தெரிவித்துள்ளார்.



# ரஷ்யாவில் கிளர்ச்சிப்படை அபாயம் நீங்கியது வாக்னர் படைத் தலைவர் பெலாரஸில் தஞ்சம்

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்ய ராணுவத்துடன் இணைந்து, அந்த நாட்டின் தனியார் பாதுகாப்பு அமைப்பான வாக்னர் ஆயுதக் குழுவும் போரில் ஈடுபட்டது. போரின்போது, வாக்னர் தலைவர் ஈவ்ஜெனி பிரிகோஸினுக்கும் ரஷ்ய ராணுவ அமைச்சர் செர்கே ஷோய்கு, தளபதி வாலரி ஜெரசிமோவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதன் காரணமாக கிளர்ச்சிப் படையினர் மீது ரஷ்ய விமானப்படை தாக்குதல் நடத்தியதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தப் பின்னணியில், உக்ரைன் போருக்கான தலைமையகமாக விளங்கிய ரஷ்யாவின் ரோஸ்டோவ் நகரில் செயல்பட்ட ரஷ்ய ராணுவக் கட்டுப்பாட்டு மையத்தை வாக்னர் ஆயுதக் குழு நேற்று முன்தினம் கைப்பற்றியது. ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் செர்கே ஷோய்கு மற்றும் ராணுவத் தளபதி வாலரி ஜெரசிமோவ் ஆகிய இருவரும் பதவி விலக வேண்டும். எங்களது வீரர்கள் இங்கிருந்து தலைநகர் மொஸ்கோ நோக்கி முன்னேறுவார்கள். குறுக்கே யாராவது வந்தால், அவர்களை அழித்துவிடுவோம், என அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இதையடுத்து, வாக்னர் படை வீரர்கள் மொஸ்கோவை நோக்கி முன்னேறிச் சென்றனர். அவர்கள் தலைநகரிலிருந்து சுமார் 200 கி.மீ. தூரம் வரை முன்னேறியதாகத் தகவல் வெளியானது. இதனால், மொஸ்கோவில் அதிபர் மாளிகை உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

அதிபர் விளாடிமிர் புடின் தொலைக்காட்சி மூலம்



நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், ரஷ்ய மக்களின் வாழ்வுக்காகவும், அவர்களின் பாதுகாப்பு, இறையாண்மைக்காகவும் நாம் போராடிக்கொண்டிருக்கிறோம். இந்தத் தருணத்தில், நமது ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கச் சிலர் முயற்சித்து வருகின்றனர். இது முதுகில் குத்தும் செயல். ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என எச்சரிக்கை விடுத்தார்.

இதனால், ரஷ்யாவில் உள்நாட்டுப் போர் ஏற்படும் சூழல் உருவானது. இந்த நிலையில், பெலாரஸ் நாட்டு அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ, ரஷ்ய அரசோடும் பிரிகோஸினோடும் சமரசப் பேச்சுவார்த்தையை நடத்தினார்.

இது குறித்து ரஷ்ய அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் நேற்று செய்தியாளர்களுக்குத் தகவல் வழங்கியிருந்தார்.

ரஷ்ய அரசுக்கும் வாக்னர் தலைவர் பிரிகோஸினுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. இதன்படி, பிரிகோஸின் ரஷ்யாவை விட்டு வெளியேறி பெலாரஸில் தஞ்சமடைவார். ரஷ்யாவுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காக பிரிகோஸின் மீதும் அவருடைய படையினர் மீதும் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகள் ரத்துச் செய்யப்படும்.

அவர்கள் ரஷ்யாவுக்கு இதுவரை செய்த சேவைக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கிளர்ச்சியில் ஈடுபடாத வாக்னர் குழு வீரர்கள், ரஷ்ய ராணுவத்தில் வரும் ஜூலை முதலாம் திகதி முதல் முறைப்படி சேர்த்துக்கொள்ளப்படுவர்.

உள்நாட்டு மோதலைத் தடுப்பதுடன், ரஷ்ய மண்ணில் ரத்தம் சிந்துவதைத் தவிர்ப்பதுதான் எங்களுடைய முக்கிய நோக்கம். எனவேதான் இந்தச் சமரச உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

இந்த உடன்படிக்கையை அடுத்து, தலைநகர் மாஸ்கோ நோக்கிப் புறப்பட்ட வாக்னர் படை வீரர்கள் தங்கள் முகாம்களுக்குத் திரும்ப வேண்டும் என்று பிரிகோஸின் உத்தரவிட்டுள்ளார். இந்த விவகாரத்தில் சமரச முயற்சியில் ஈடுபட்ட பெலாரஸ் அதிபர் லுகாஷென்கோவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம், என்று ரஷ்ய அதிபர் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

பெலாரஸ் அதிபரின் முயற்சியால் ரஷ்யாவில் ஆயுதக் கிளர்ச்சி முடிவுக்கு வந்துள்ளது. இதனால், அங்கு உள்நாட்டுப் போர்ப் பதற்றம் தணிந்துள்ளது.

## கம்போடியாவில் வாக்களிக்காத அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடத் தடை அமுலுக்கு வந்தது



தென்கிழக்கு ஆசிய நாடான கம்போடியாவில் அடுத்த மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் அங்கு அரசியல்வாதிகள் வாக்களிப்பதைக் கட்டாயமாக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதன்படி, வாக்களிக்கத் தவறிய அரசியல்வாதிகள் எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தலில் போட்டியிட முடியாது.

அத்தோடு, பொதுமக்கள் வாக்களிப்பதைத் தடுக்கும் அரசியல் கட்சியினருக்கு அபராதம் விதிக்கவும் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

இந்தச் சட்டத்திருத்தமானது அரசியல்வாதிகளின் பொறுப்புகளை மேம்படுத்துவதற்கும், இடையூறு இல்லாத தேர்தலை உறுதி செய்வதற்கும் கொண்டு வரப்பட்டு உள்ளது, என அந்த நாட்டின் துணைப் பிரதமர் சார் கெங் தெரிவித்தார்.

ஆனால், பொதுமக்களுக்கு இந்தச் சட்டத்திருத்தம் பொருந்தாது எனவும், எதிர்காலத் தேர்தலில் போட்டியிட விரும்புகிறவர்கள் அவசியம் வாக்களிக்கச் செல்லவேண்டும், எனவும் அவர் கூறினார்.

## உலகளவில் அதிகமானோர் ஊசி மூலம் போதை மருந்துகளைப் பாவிக்கின்றனர்

### ஐ.நா. அறிக்கையில் சுட்டிக்காட்டு

உலகளாவிய ரீதியில், முன்னரை விட அதிகமான மக்கள் ஊசி மூலம் போதைப் பொருட்களை உட்செலுத்துவதாக உலகளாவிய போதைப்பொருள் பயன்பாடு பற்றிய ஐக்கிய நாடுகளின் அறிக்கை கூறுகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டில் 13.2 மில்லியன் மக்கள் ஊசி மூலம் போதை மருந்துகளை உட்செலுத்தியுள்ளதாகவும், இது முன்னர் மதிப்பிடப்பட்டதை விட 18 சதவீதம் அதிகம் எனவும், வியன்னாவைத் தளமாகக் கொண்ட போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பெண்டானில் மற்றும் மெத்தாம்பேட்டமைன் போன்ற செயற்கைப் பொருள்கள் இப்போது சட்ட விரோத மருந்துச் சந்தைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன, எனவும் அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

உலகளவில், போதைப் பொருள் பாவனையாளர்கள் 23 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும், போதைப் பொருள் தொடர்பான பிரச்சினைகள் கடந்த ஒரு தசாப்தத்தில் 45 சதவீதத்தால் அதிகரித்து, ஏறக்குறைய 40 மில்லியனாகக் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், மனநலக் குறைபாடுகள் உள்ளவர்கள், சமூக, பொருளாதாரப் பின்னணியில் பின்தங்கியவர்கள் மற்றும் இளைஞர்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாகக் காணப்படுகின்றனர் எனவும் அந்த அறிக்கை கூறுகிறது.

கிழக்கு, தென்கிழக்கு ஆசியாவைக் காட்டிலும், கிழக்கு ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகிய நாடுகளில் அத்தகைய போதை மருந்துகளை உட்செலுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது எனவும், 18 நாடுகளின் தரவுகளின் அடிப்படையில், பெண்களை விட ஆண்கள் ஐந்து மடங்கு அதிகமாகப் போதை மருந்துகளைச் செலுத்தி, தங்கள் பெண் நண்பர்களுக்கும் இந்தப் பழக்கத்தை அறிமுகப்படுத்துவதாகவும் அறிக்கையில் உள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், ஐந்தில் ஒருவர் மட்டுமே இதற்கான சிகிச்சைகளைப் பெற அணுக முடிவதாகவும், குறிப்பாக பெண்கள் தடைகளை எதிர்கொள்வதாகவும் ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

போதை ஊசி மருந்துப் பாவனைகள், கொவிட்-19 உடன் தொடர்பு பட்டவையாகவும், சட்டத் தடைகள், சமூக இழிவு, குழந்தைப் பேறு இல்லாமை மற்றும் தங்கள் குழந்தைகளின் பாதுகாப்பை இழக்க நேரிடும் என்ற பயம் போன்றவற்றாலும் அதிகரிப்பதாகத் தெரியவந்துள்ளது.

வியன்னாவைத் தளமாகக் கொண்ட போதைப் பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் தலைவரான காடா வாலி இது தொடர்பில் கூறுகையில், பல சந்தர்ப்பங்களில், சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு சிகிச்சையளிக்கும் போது அது தோல்வியில் முடிவடைகின்றது, என்றார்.

போதைப்பொருள் உற்பத்திகளைக் கட்டுப்படுத்தி, போதைப் பொருள்களைக் கடத்தும் கும்பல்களுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், செயற்கை மருந்துகளின் உற்பத்தியானது, சட்ட விரோதச் சந்தைகளைத் தூண்டி, மக்கள் மற்றும் சமூகங்களுக்கு அதிக தீங்கை விளைவிக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

## குடையை வாங்கிக்கொண்டு பெண் அலுவலரை மழையில் நனையவிட்ட பாகிஸ்தான் பிரதமர்



உலகளாவிய நிதியுதவி ஒப்பந்தம் தொடர்பான 2 நாள் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், பிரான்ஸ் தலைநகர் பாரிசுக்குச் சென்றிருந்தார்.

சவுதி மன்னர் சல்மான் பின் அப்துல் லாஜிஸ், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன், எகிப்து அதிபர் அப்தெல் ஃபத்தா அல்-சிசி உள்ளிட்ட உலகத் தலைவர்களை அவர் சந்தித்தார். ஆனால், இந்த சந்திப்புகளைவிட மாநாடு நடைபெறும் அரங்கத்திற்கு அவர் வந்துசேரும் வீடியோதான் தற்போது டிரெண்டிங்கில் உள்ளது.

இது தொடர்பான காணொளியில், ஷெபாஸ் ஷெரீப் காரிலிருந்து இறங்கும்போது மழை பெய்ததால் பெண் அலுவலர் ஒருவர் அவருக்குக் குடை பிடித்தபடி வருகிறார். அப்போது அப்பெண் அதிகாரியிடம் இருந்து ஷெபாஸ் ஷெரீப் குடையை வாங்கிக்கொண்டு, தான் மட்டும் தனியாகச் செல்கிறார். அந்தப் பெண் அதிகாரி கொட்டும் மழையில் நனைந்தபடி பாகிஸ்தான் பிரதமரைப் பின்தொடர்கிறார்.

இந்த காணொளி சமூக ஊடகங்களில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானின் சமூக ஊடக பயன்பாட்டாளர்கள் தங்கள் பிரதமரின் இந்த முரட்டுத்தனமான நடத்தையால் கோபம் அடைந்துள்ளனர். இது அநாகரிமான செயல், என்று பிரதமரை அவர்கள் விமர்சித்து வருகின்றனர்.

# அமெரிக்காவில் ஆற்றின் மீதான பாலம் இடிந்து விழுந்து விபத்து



அமெரிக்காவின் மொன்டானா மாகாணத்தில், கடந்த சனிக்கிழமை ஆற்றுப்பாலம் இடிந்து விழுந்ததில் அதன் மீது பயணித்துக்கொண்டிருந்த சரக்கு ரயில் ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

அமெரிக்காவின் ஸ்டில்வாட்டர் பகுதியில் உள்ள யெல்லோஸ்டோன் ஆற்றின் மேலாகக் கட்டப்பட்ட ரயில் பாலத்தின் மீது, வீதி அமைப்பதற்கான கலவையை ஏற்றிக்கொண்டு ரயில் சென்றபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், விபத்தில் ரயில் ஓட்டுநர்கள் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ரயிலில் இருந்த கலவை ஆற்றில் சிதறியதால், ஆற்றிலிருந்து குடிநீர் எடுக்க வேண்டாமென பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாலம் இடிந்ததில், இணையத் தொடுப்புக் கம்பிகளும் சேதமடைந்துள்ளதால் இணைய சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யாவின் புதிய தூதரகம் அமைப்புக்கு அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் தடை



அவுஸ்திரேலியாவின் தலைநகரில் புதிய தூதரகத்தைக் கட்டுவதற்காக திட்டமிட்டிருந்த நிலத்தைக் கைப்பற்ற எண்ணிய ரஷ்யாவின் முயற்சியை அவுஸ்திரேலியாவின் உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்த மாத நடுப்பகுதியில் அவுஸ்திரேலிய அரசாங்கம், தேசியப் பாதுகாப்புக் காரணங்களுக்காக ரஷ்யாவின் குத்தகையை ரத்துச் செய்திருந்தது. நாடாளுமன்றத்தில் இருந்து வெறும் 400 மீற்றர் தொலைவில் இருப்பதால் திட்டமிடப்பட்ட தூதரகம் உளவு பார்க்கும் அபாயத்தை ஏற்படுத்தியதாக அவுஸ்திரேலிய நிபுணர்கள் தெரிவித்தனர்.

நீதிமன்றத் தீர்ப்பையடுத்து, அந்த இடத்துக்கு அருகே போராட்டத்தில் அமர்ந்திருந்த ரஷ்ய தூதரக அதிகாரி ஒருவர் தீர்ப்புக்குப் பிறகு, அவ்விடத்திலிருந்து தூதரகக் காரில் புறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யாவின் தற்போதைய தூதரகம் அவுஸ்திரேலியாவின் கான்பெராவில் உள்ள கூட்டாட்சிப் நாடாளுமன்றக் கட்டிடத்திலிருந்து சிறிது தொலைவில் உள்ளது.

2008 இல் புதிய தளத்திற்கான குத்தகையை ரஷ்யா பெற்றது. 2011 இல் அதன் புதிய தூதரகத்தை அங்கு கட்டுவதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. இருப்பினும், இந்த ஆண்டு ஜூன் 15 அன்று, அவுஸ்திரேலியாவின் நாடாளுமன்றம் அந்தக் குத்தகையை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட புதிய சட்டங்களை அமுல்படுத்தியிருந்தது.

இது தொடர்பில், ரஷ்யத் தூதரகத்தினரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புகாரில், ஏற்கனவே கட்டுமானப் பணிக்காக 8.2 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததோடு, தடை உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில் பகுதியளவு கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தின் பணிகள் பாதிக்கப்படும் என்றும் ரஷ்யா தெரிவித்தது.

ஆனால், அவுஸ்திரேலியாவின் உயர் நீதிமன்றம், ரஷ்யாவின் குறித்த புகாரை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கர்நாடகாவில் ஒரு மின்குமிழ் மட்டும் உள்ள வீட்டுக்கு மின் கட்டணம் ஒரு லட்சம் - 90 வயது மூதாட்டி அதிர்ச்சி

கர்நாடகாவில் 90 வயதான மூதாட்டியின் வீட்டில் ஒரே ஒரு மின் குமிழ் மட்டுமே உள்ள நிலையில் அவருக்கு ஒரு லட்சம் ரூபா மின்சாரக் கட்டணத்துக்கான பில் வந்ததால் அதிர்ச்சியடைந்துள்ளார்.

கர்நாடகாவில் முதல்வர் சித்தராமையா தலைமையில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பின்னர் அனைவருக்கும் 200 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களைக் காட்டிலும் மே மாதத்தில் மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்து, மாநிலம் தழுவிய போராட்டத்தில் தொழில் துறையினர் ஈடுபட்டுள்ளதால் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கொப்பல் மாவட்டத்தில் உள்ள பாக்யநகரைச் சேர்ந்த கிரிஜம்மா (வயது 90) என்ற முதியவர் தனது வீட்டில் ஒரே ஒரு மின் குமிழை மட்டுமே பயன்படுத்தும் நிலையில், அவருக்கு ஜூன் மாத மின்சாரக் கட்டணமாக ஒரு லட்சத்து மூவாயிரத்து 315 ரூபாவுக்கு பில் வந்துள்ளது. இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அவர், இதுவரை மாதத்துக்கு 70 முதல் 90 ரூபா வரை மட்டுமே மின்கட்டணம் வரும். இந்த முறை எப்படி ஒரு லட்சத்துக்கும் அதிகமாக வந்தது?, என மின்சாரத் துறை ஊழியர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார். இந்த விவகாரம் ஊடகங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது குறித்து கர்நாடக மின்சாரத்துறை அமைச்சர் கே.ஜே.ஜார்ஜ் கூறுகையில், இயந்திரக் கோளாறு காரணமாக மூதாட்டிக்கு தவறான பில் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அவர் அந்தத் தொகையை மின் கட்டணமாகச் செலுத்த வேண்டியதில்லை. மின்சாரத்துறை ஊழியர்கள் அவரது வீட்டுக்குச் சென்று விளக்கம் அளித்துள்ளனர், என்று தெரிவித்துள்ளார். உடனடியாக இந்தப் பிரச்சினையில் அமைச்சர் தலையிட்டதால் மூதாட்டிக்குச் சிக்கல் தீர்ந்துள்ளது.



இதேபோல், உடுப்பி மாவட்டம் குந்தாபுராவில் உள்ள கடை ஒன்றுக்கு மே மாத மின்சாரக் கட்டணமாக ஒரு கோடி ரூபாவுக்கு பில் வந்ததால் அதன் உரிமையாளர் கிரிஷ் ஷெட்டி என்பவர் அதிர்ச்சி அடைந்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், கடந்த மாதத்தில் 13 லட்சத்து பதினோராயிரத்து 155 யூனிட் மின்சாரம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கான வரியுடன் சேர்த்து ஒரு கோடி ரூபா மின் கட்டணம் செலுத்த வேண்டும் எனவும் மின்சாரத்துறை ஊழியர்கள் கூறினர். இதனால், எனக்குக் கடும் மன உளைச்சல் ஏற்பட்டது.

இது குறித்து அதிகாரிகளிடம் முறையிட்டதைத் தொடர்ந்து, மீண்டும் மறு கணக்கீடு செய்யப்பட்டது. அப்போது 1,574 யூனிட் மின்சாரம் மட்டுமே பயன்படுத்தப்பட்டமை தெரிய வந்தது. இயந்திரக் கோளாறால் தவறு ஏற்பட்டதாக ஊழியர்கள் விளக்கம் அளித்தனர், என்று தெரிவித்திருக்கிறார்.

## பாலியல் உறவு பற்றி 16 வயதுச் சிறுமி முடிவு செய்யலாம் மேகாலயா உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் பரபரப்பு

மேகாலயாவில் 16 வயதுச் சிறுமியை பாலியல் துன்புறுத்தல் செய்து விட்டதாக சிறுவன் ஒருவன் மீது பதிவு செய்யப்பட்ட முதல் குற்ற அறிக்கையை நீக்கக் கோரி, மேகாலயா உயர் நீதிமன்றில் சிறுவன் தரப்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில், மனுதாரரான சிறுவன் பல்வேறு வீடுகளில் வேலை செய்து வந்துள்ளார். அப்போது, அந்தச் சிறுமியுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது. சிறுவனின் மாமா வீட்டில் வைத்து இருவரிடையேயும் பாலியல் ரீதியிலான உறவு நடந்துள்ளமை தெரியவந்துள்ளது. ஆனால், பாலியல் தாக்குதல் என்ற அடிப்படையில் இந்த வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. அது கருத்தொருமித்த செயலாகவே நடைபெற்றுள்ளது.

சிறுமி தனது வாக்குமூலத்தில், தான் அந்தச் சிறுவனின் காதலி என்றும், கட்டாயம் எதுவுமின்றி உறவுக்கு ஒப்புதல் அளித்தது பற்றியும் கூறியுள்ளார். மனுதாரரான சிறுவனும் பாதிக்கப்பட்ட சிறுமியும் காதல் உறவிலேயே இருந்துள்ளனர், எனவும் சிறுவன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி விசாரணை செய்த மேகாலயா உயர்நீதிமன்ற நீதிபதி டபிள்யூ. தீங்தோ வெளியிட்ட தீர்ப்பில், 16 வயதில் உடல் மற்றும் மனரீதியாக ஒருவர் நன்றாக வளர்ச்சி அடைந்திருப்பார். அவர்களது சுகாதார நலன் பற்றியும், பாலியல் உறவில் ஈடுபடுவது உள்பட அவர்களுக்கு சுயநினைவுடனான முடிவை எடுப்பதற்கான தகுதியையும் அவர்கள் பெற்றிருப்பார்கள் என கருதுவது நியாயமாகும். இதனால், சிறுமியின் வாக்குமூலம் மற்றும் மனுதாரரின் ஆவணங்கள் அடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது, சிறுமியின் வாக்குமூலம் மனுதாரருக்கு ஆதரவாக அமைந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

இதனால், இதில் குற்ற உள்நோக்கம் எதுவும் இல்லை என நீதிமன்றம் முடிவு செய்தது. முடிவில், மனுதாரருக்கு எதிரான முதல் குற்ற அறிக்கைப் பதிவைத் தள்ளுபடி செய்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.06.2023இல் வெளியிடப்பெற்றது.